இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வியாழக்கிழமை 27-11-2025

# உரிமைப் பறிப்புச் சட்டங்கள்!

ஒன்றிய பா.ஜ.க. அரசு கொண்டு வந்துள்ள புதிய தொழிலாளர் விரோதச் சட்டங்களைத் திரும்பப் பெற வலியுறுத்தி, நாடு தழுவிய பொது வேலை நிறுத்தம் நடத்தி உள்ளன தொழிற்சங்கங்கள்.

தொ.மு.ச., ஐ.என்.டி.யு.சி, ஏ.ஐ.சி.டி.யு.சி, எச்.எம்.எஸ், சி.ஐ.டி.யு. உள்பட 10 மத்திய தொழிற்சங்கங்கள் சார்பில் கூட்டறிக்கை ஒன்று வெளியிடப்பட்டு உள்ளது.

**“ஏற்கெனவே நடைமுறையில் இருந்த 29 தொழிலாளர் நலச்சட்டங்களை நீக்கிவிட்டு அவற்றுக்கு பதிலாக புதிதாக 4 தொழிலாளர் சட்டத் தொகுப்புகளை ஒன்றிய அரசு உருவாக்கி உள்ளது. தொழிலாளர் விரோத, முதலாளிகளுக்கு ஆதரவான இந்த சட்டங்களை தன்னிச்சையாக நடைமுறைப்படுத்தி உள்ளதற்கு, மத்திய தொழிற்சங்கங்களின் கூட்டு நடவடிக்கைக்குழு தனது கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறது.**

**4 தொழிலாளர் சட்டத் தொகுப்புகளும், உழைக்கும் வர்க்கத்தினரின் நலன்களுக்கு முற்றிலும் எதிரானவை, இந்தச் சட்டத்தொகுப்புகளை தொழிலாளர்களின் வாழ்வாதாரங்களுக்கு எதிரான இனரீதியிலான தாக்குதலாகக் கருதுகிறோம்.**

**இவை தொழிலாளர்களை அடிமையாக்குவதுடன் அவர்களின் உரிமைகளை முற்றிலும் பறிக்கும். புதிய சட்டத் தொகுப்புகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் தொழிற்சங்கங்கள் மற்றும் தொழில் கூட்டமைப்புகள் சார்பில் நாடுதழுவிய பொது வேலைநிறுத்தப் போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கிறோம்**” என்று அதில் கூறப்பட்டு உள்ளது.

தொழிலாளர் வர்க்கத்தின் மீது ஒன்றிய பா.ஜ.க. அரசு கடுமையான தாக்குதலைத் தொடுத்துள்ளது. பல்லாண்டு காலமாக தொழிலாளர் வர்க்கமும், ஜனநாயக சக்திகளும் போராடியதன் மூலமாகக் கிடைத்த சட்டங்களை முற்றிலுமாகப் பறிக்கும் செயலைச் செய்துள்ளது. தொழிலாளர்கள் தொடர்புடைய 29 சட்டங்களை, மொத்தமாக 4 சட்டமாக ஆக்கி விட்டார்கள்.

**தொழிலுறவு சட்டத் தொகுப்பு 2000, சம்பளத் தொகுப்பு 2019, பணித்தலப் பாதுகாப்பு மற்றும் பணி நிலைமைகள் சட்டத் தொகுப்பு 2020, சமூகப் பாதுகாப்பு தொகுப்பு 2020 என்ற நான்கும்தான் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள சட்டங்கள். இதனை நவம்பர் 21 முதல் அமல்படுத்துவதாக ஒன்றிய பா.ஜ.க. அரசு அறிவித்துள்ளது. இந்த சட்டங்கள் நான்கும் தொழிலாளர்களின் ஊதியப் பாதுகாப்பு, வேலைப் பாதுகாப்பு, சமூகப் பாதுகாப்பு ஆகிய மூன்றையும் கேள்விக்குறி ஆக்குகிறது. இவை மக்கள் விரோத, ஜனநாயக விரோத, சமூக விரோத சட்டங்கள் ஆகும்.**

ஐந்து ஆண்டுகளுக்கு முன் உருவாக்கப்பட்ட சட்டங்கள் இவை. பலத்த எதிர்ப்பு காரணமாக இவை நிறுத்தி வைக்கப்பட்டு இருந்தது. இப்போது மீண்டும் தூசி தட்டி எடுத்து வருகிறார்கள். முந்தைய சட்டங்களில் இருந்த தொழிலாளர் பாதுகாப்பு விதிகள், இதில் கவனமாக நீக்கப்பட்டுள்ளது.

கார்ப்பரேட் நிறுவனங்களுக்கும், பெரு முதலாளிகளுக்கும் சாதகமாக இந்த சட்டங்கள் உருவாக்கப்பட்டு உள்ளன. குறிப்பிட்ட கால வேலை வாய்ப்பு என்பதை சட்டபூர்வமாக அங்கீகரிப்பதன் மூலமாக நிரந்தர வேலை வாய்ப்பை முடிவுக்கு கொண்டு வர நினைக்கிறார்கள். நிரந்தரத் தொழிலாளர்களை, ஒப்பந்தத் தொழிலாளர்களாக மாற்றவே இச்சட்டம் பயன்படும்.

100 தொழிலாளர்களுக்கு மேல் இருந்தால் ஆலை மூடலுக்கு அனுமதி தேவை என்று இருந்த சட்டத்தை 300 தொழிலாளிக்கு மேல் தேவை என மாற்றி விட்டார்கள். 300 தொழிலாளர்கள் வரை உள்ள நிறுவனங்கள் அரசின் அனுமதி இல்லாமல் எதையும் செய்யலாம் என்ற அதிகாரம் தரப்பட்டுள்ளது. அரசின் அனுமதி இல்லாமல் ஆட்குறைப்பு,பணி நீக்கம், ஆலை மூடல் ஆகியவற்றைச் செய்யலாம்.

**இந்தியாவில் தொழிலாளர் தொடர்புடைய 12 லட்சம் வழக்குகள் நிலுவையில் உள்ளன. புதிய சட்டங்கள், இந்த வழக்கின் தன்மையை மாற்றும். சிக்கல் ஆக்கும். முடிவெடுக்க விடாமல் செய்யும். தொழிலாளர்களின் வாழ்க்கைக்கே முற்றுப்புள்ளி வைத்துவிடும்.**

அமைப்பு சாரா தொழிலாளர்களின் நலன் கேள்விக்குறி ஆகி உள்ளது. இவர்களது பணிப் பாதுகாப்பு பற்றிய கவலை இச்சட்டங்களில் இல்லை. இலட்சக்கணக்கான தொழிலாளர்களை, ஊதிய வரம்புக்கு வெளியே நிறுத்துகிறது. மகாத்மா காந்தி ஊரக வேலை வாய்ப்புத் திட்டத் தொழிலாளர்கள் குறித்து, இச்சட்டங்கள் கவனத்தில் கொள்ளவில்லை.

18 ஆயிரம் ரூபாய்க்கு மேல் ஊதியம் பெறுபவர் ‘தொழிலாளி’ என்ற வரையறைக்குள் வரமாட்டார். தொழிலாளி, ஊழியர் என்ற சொற்களை மாற்றி மாற்றி பயன்படுத்தி குழப்பம் செய்துவிட்டார்கள். ஒப்பந்த அடிப்படை நியமனத்தை சட்டபூர்வமாக ஆக்கிவிட்டார்கள். ஒரு தொழிற்சங்கத்தை பதிவு செய்ய வேண்டுமானால் அதன் ஊழியர்களில் 10 விழுக்காடு தொழிலாளர்கள், அச்சங்கத்தில் உறுப்பினர்களாக இருக்க வேண்டும். நிர்வாகத்துடன் பேச்சுவார்த்தை நடத்தும் சங்கத்துக்கு 51 விழுக்காடு தொழிலாளர்களது ஆதரவு தேவை. தொழிலாளர் நீதி மன்றங்கள் ஒழிக்கப்பட்டு, தீர்ப்பாயங்கள் வரப் போகின்றன. ஊதியம் நீங்கலான இதரப்படிகள், இனி சட்டபூர்வமானவை அல்ல. தொழிலாளர் துறை ஆய்வாளர்கள் இனி திடீர் ஆய்வுகளை மேற்கொள்ள முடியாது. ‘விலக்கு அளிக்கலாம்’ என்ற நிபந்தனையுடன் வார விடுமுறை தரப்பட்டுள்ளது. பாதுகாப்புச் சட்டங்களை, விதிமுறையாக மாற்றிவிட்டார்கள். இவைதான் இனி அடுத்தடுத்து நடக்க இருப்பவை ஆகும்.

**மதவாதக் கொள்கையும், கார்ப்பரேட் சலுகையும் மட்டும் தான் ஒன்றிய பா.ஜ.க.வின் இரண்டு வகையான முகம் ஆகும். இவற்றுக்கு எதிரான அனைத்தையும் எப்போதும் செய்வார்கள். நாட்டின் மிக முக்கியமான அமைப்பான இந்தியத் தொழிலாளர் மாநாடு ( ILC) கடந்த பத்து ஆண்டுகளாக கூட்டப்படவில்லை. இதனைக் கூட்டுங்கள் என்று இடதுசாரி அமைப்புகள் மட்டுமல்ல; ஆர்.எஸ்.எஸின் தொழிற்சங்க அமைப்பு கூட கோரிக்கை வைத்தது. அதனையே செய்யாத அரசு தான் பா.ஜ.க. அரசு. இவர்கள் கொண்டு வந்த சட்டத்தின் சில பிரிவுகள் தொழிலாளர் விரோதமானவை என்று பாரதிய மஸ்தூர் சங்கமும் சொல்கிறது.**

கொரோனா காலத்தில் உருவாக்கப்பட்டு, எதிர்க்கட்சிகள் இல்லாத நேரத்தில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டங்கள் இவை. இச்சட்டமானது தொழிலாளர் விரோதமானவை மட்டுமல்ல; மக்கள் விரோதமானவை. பா.ஜ.க. அதனைத் தான் எப்போதும் செய்யும். இதனை ஜனநாயக அமைப்புகள் ஒன்று சேர்ந்து முறியடிக்க வேண்டும்.



ஈரோடு மாவட்டத்தில் நடைபெறும் பல்வேறு அரசு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள வருகை தந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நேற்று (26.11.2025) பொது மக்கள் மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.11.2025) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை சார்பில் ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி, ஜெயராமபுரத்தில் சுதந்திரப் போராட்ட வீரர் மாவீரன் பொல்லான் அவர்களின் முழு திருவுருவச் சிலையுடன் கூடிய அரங்கத்தை திறந்து வைத்து, மாவீரன் பொல்லான் அவர்களின் வாரிசுதாரர்கள் வரதராஜன், முருகன், வீரன், பழனிச்சாமி, ராஜன் ஆகியோருக்கு சால்வை அணிவித்து சிறப்பு செய்தார். இவ்விழாவில், அமைச்சர்கள் கே.என். நேரு, எ.வ. வேலு, சு. முத்துசாமி, மு.பெ.சாமிநாதன், மருத்துவர் மா. மதிவேந்தன், திருமதி. என். கயல்விழி செல்வராஜ், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அந்தியூர் செல்வராஜ், கே.இ.பிரகாஷ், மாதேஸ்வரன், சட்டமன்ற உறுப்பினர்கள் வி.செந்தில்பாலாஜி, வி.சி.சந்திரகுமார், ஏ.ஜி. வெங்கடாசலம், ஈ.ஆர். ஈஸ்வரன், ஆதிதமிழர் பேரவையின் நிறுவனத் தலைவர் அதியமான் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளின் தலைவர்கள், ஆட்சித் தலைவர் எஸ்.கந்தசாமி, தூய்மைப் பணியாளர் நல வாரியத்தின் தலைவர் டாக்டர் திப்பம்பட்டி வெ.ஆறுச்சாமி, துணைத் தலைவர் திருமதி கனிமொழி பத்மநாபன், மாவீரன் பொல்லான் அவர்களின் வாரிசுதாரர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கல்விச் சட்டங்களில் உரிய திருத்தம் செய்து - ஆசிரியர்களைப் பாதுகாப்பதுடன்

# குழந்தைகளின் கல்வியும் பாதிக்காதிருக்க உறுதிசெய்வீர்!

## பிரதமருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்!

**சென்னை, நவ.27-**

**இலவச மற்றும் கட்டாய கல்வி உரிமைச் சட்டம், 2009 (The RTE Act, 2009) பிரிவு 23 மற்றும் தேசிய ஆசிரியர் கல்விக் குழும சட்டம், 1993 (NCTE Act 1993), பிரிவு 12Aல் உரிய திருத்தங்கள் மேற்கொண்டு, ஆசிரியர்களைப் பாதுகாப்பதுடன், குழந்தைகளின் கல்வியும் பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதிசெய்திட வேண்டுமென வலியுறுத்தி மாண்புமிகு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.**

நாடு முழுவதும் இலட்சக்கணக்கான ஆசிரியர்களை, குறிப்பாக தமிழ்நாட்டில் கணிசமான எண்ணிக்கையிலான ஆசிரியர்களை பாதிக்கும் அவசரமான மற்றும் முக்கியமான பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் ஆதரவைக் கோரி இன்று (25.11.2025) கடிதம் எழுதியுள்ள தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், இலவச மற்றும் கட்டாய கல்வி உரிமைச் சட்டம், 2009 (The RTE Act, 2009) பிரிவு 23 மற்றும் தேசிய ஆசிரியர் கல்விக் குழும சட்டம், 1993 (NCTE Act 1993), பிரிவு 12Aல் உரிய திருத்தங்கள் மேற்கொண்டு, ஆசிரியர்களைப் பாதுகாப்பதுடன், பதவி உயர்வுகளுக்கு தகுதி உடையவர்களாக இருப்பதையும், குழந்தைகளின் கல்வியும் பாதிக்கப்படாமல் இருப்பதையும் உறுதிசெய்திட வேண்டுமென வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.

முதலமைச்சர் அவர்கள் எழுதியுள்ள கடிதத்தில், சிவில் மேல்முறையீடு எண் 1405/2025, 1385/2025 மற்றும் 1386/2025 மற்றும் பிற வழக்குகளில் 01.09.2025 அன்று உச்சநீதிமன்றத்தால் வழங்கப்பட்ட சமீபத்திய தீர்ப்பில், ஆசிரியர் தகுதித் தேர்வில் (TET) தேர்ச்சி பெறாத பணியில் உள்ள அனைத்து ஆசிரியர்களும், அப்பணியில் தொடர இரண்டு ஆண்டுகளுக்குள் TET தகுதியைப் பெற வேண்டும் என்றும், மேலும், ஐந்து ஆண்டுகளுக்கும் குறைவான பணிக்காலம் உள்ள ஆசிரியர்கள் பணியைத் தொடர அனுமதிக்கப்பட்டாலும், TET தகுதி பெறாவிட்டால் பதவி உயர்வுக்குத் தகுதியற்றவர்களாக இருப்பார்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார். தேசிய ஆசிரியர் கல்விக் குழுமமானது (National Council for Teacher Education NCTE), 23.8.2010-க்கு முன்பு நியமிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு, ஆசிரியர் தகுதித் தேர்வு (TET) போன்ற புதிய தகுதித் தேவைகளிலிருந்து ஆரம்பத்தில் விலக்கு அளித்திருந்தது என்றும், இருப்பினும், கல்வி உரிமைச் சட்டத்தில் (RTE) உச்ச நீதிமன்றத்தால் வழங்கப்பட்டுள்ள தற்போதைய இந்தத் தீர்ப்புரை, ஆசிரியர்களுக்கு முன்பு வழங்கப்பட்ட விலக்கினை மீறி, TET கட்டாயமாக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ள அவர், இதன் விளைவாக, இந்த ஆசிரியர்கள் இப்போது இரண்டு ஆண்டுகளுக்குள் TET தேர்ச்சி பெற வேண்டும்; இல்லாவிடில், அவர்களின் வேலை பறிக்கப்படும் என்ற நிலை பெருத்த நிருவாக சிரமத்தையும், ஆசிரியர்களுக்கு தனிப்பட்ட சிரமத்தையும் ஏற்படுத்தும் என்று வருத்தத்தோடு தெரிவித்துள்ளார்.

பணி நிபந்தனைகளில் இத்தகைய மாற்றம் மற்றும் நியமனத்திற்குப் பின் பதவி உயர்வுக்கான அவர்களின் நியாயமான எதிர்பார்ப்பில் இடையூறு என்பது, ஆசிரியர்களின் உரிமைகளை மீறுவதாக அமைந்துள்ளது என்றும், இது ஆசிரியர்களின் நியமனத்தின் போது, நடைமுறையில் இருந்த சட்டப்பூர்வ விதிகளின்கீழ் முழுமையாக தகுதி பெற்று, முறையாக நியமிக்கப்பட்ட ஆசிரியர்களில் பெரும்பான்மையோரை நேரடியாக பாதிப்பதாக முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளார்.

அந்த வகையில், தமிழ்நாட்டில் மட்டும் ஏறத்தாழ நான்கு இலட்சம் ஆசிரியர்கள் பாதிக்கப்படுவதாகத் தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், நியமனம் செய்யப்பட்ட நேரத்தில், அவர்கள் அனைவரும் நிர்ணயிக்கப்பட்ட அனைத்து கல்வி மற்றும் தொழில்முறை தகுதிகளையும் பூர்த்தி செய்தவர்கள் என்றும், சட்டப்படியான மற்றும் முறையான செயல்முறைகள் மூலம் தேர்வு செய்யப்பட்டவர்கள் என்றும், அதோடு 2011-ல் TET அறிமுகப்படுத்தப்படுவதற்கு பல ஆண்டுகளுக்கு முன்பே பணியில் சேர்ந்தவர்கள் அவர்கள் என்றும் தனது கடிதத்தில் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

இந்த ஆசிரியர்களுக்கு TET-ஐ முந்தைய தேதியிட்டு அமல்படுத்துவது என்பது, அவர்கள் பணியில் தொடர்வதற்கும் மற்றும் பதவி உயர்வுகளுக்கான தகுதிக்கும் நீண்ட காலமாக நிலைநிறுத்தப்பட்ட பணி உரிமைகளில் குறிப்பிடத்தக்க இடையூறை உருவாக்குகிறது என்று தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், இது மாநிலத்தில் நிர்வாகரீதியாக சாத்தியமற்ற ஒரு நிலையை உருவாக்குகிறது என்றும், பள்ளிக் கல்வி அமைப்பின் செயல்பாட்டைச் சீர்குலைக்கும் வகையில் கடுமையான அபாயத்தை ஏற்படுத்துகிறது என்றும் கவலைபடத் தெரிவித்துள்ளார்.

முந்தைய தேதியிட்டு இதனை அமல்படுத்துவது என்பது, பெரிய அளவிலான விளைவுகளை ஏற்படுத்தும் என்பது நாடு முழுவதும் கண்கூடாகத் தெரியும் என்றும், ஆட்சேர்ப்பு சுழற்சிகள், தகுதியான ஆசிரியர்கள் கிடைக்கும் தன்மை மற்றும் கிராமப்புற மற்றும் தொலைதூரப் பகுதிகளில் பணி நிலைமை ஆகியவற்றின் அடிப்படையில், எந்த மாநிலத்திலும் இவ்வளவு பெரிய எண்ணிக்கையிலான ஆசிரியர்களை மாற்றுவது சாத்தியமற்றது என்றும் தனது கடிதத்தில் முதலமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டு பல ஆண்டுகளுக்குப் பிறகு அறிமுகப்படுத்தப்பட்ட தகுதியைக் காரணமாகக் கொண்டு மட்டும், நீண்ட காலமாக பணிபுரிந்து வரும் அனுபவம் பெற்ற ஆசிரியர்களுக்கு பதவி உயர்விற்கான வாய்ப்புகளை மறுப்பது என்பது, பெருத்த அளவிலான சிரமத்தையும், தேக்க நிலையையும் ஏற்படுத்துவதாக கவலையோடு குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், RTE சட்டத்தின் பிரிவு 23ல் தெரிவிக்கப்பட்டுள்ள குறிப்புரைகள் காரணமாக, நாடு முழுவதும் இலட்சக்கணக்கான ஆசிரியர்கள் இவ்வாறு பாதிக்கப்படுவார்கள் என்றும், இந்தக் குறிப்புரையினால் ஏற்படும் பாதிப்பு என்பது, பிரிவுக் கூறு 21-A-ன்கீழ் அரசியலமைப்பு ரீதியான கல்வி உரிமைக்கும் நேரடி தாக்கங்களை ஏற்படுத்துவதாகத் தெரிவித்துள்ளார்.

மேற்கூறியவற்றைக் கருத்தில் கொண்டு, இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009 (The RTE Act, 2009) பிரிவு 23 மற்றும் தேசிய ஆசிரியர் கல்விக் குழும சட்டம், 1993 (NCTE Act 1993), பிரிவு 12A ஆகியவற்றில் உரிய திருத்தங்களை மேற்கொள்ளத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க ஒன்றிய கல்வி அமைச்சகத்திற்கு அறிவுறுத்திடுமாறு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களைக் கேட்டுக் கொண்டுள்ள முதலமைச்சர் அவர்கள், அப்போதுதான் 23.08.2010 அன்று பணியில் இருந்த ஆசிரியர்கள் பாதுகாக்கப்படுவதுடன், பதவி உயர்வுகளுக்கு தகுதி உடையவர்களாக இருப்பதையும், குழந்தைகளின் கல்வியும் பாதிக்கப்படாமல் இருப்பதையும் உறுதிசெய்திட இயலும் என்று தெரிவித்துள்ளார்.




கன்னியாகுமரி மாவட்டம் 47 மீனவ கிராமங்கள் மற்றும் உள்நாட்டு மீனவர்கள் உள்ளடக்கி கடலோர அமைதி மற்றும் வளர்ச்சி (CPD) இணைந்து நடத்திய உலக மீனவர் நாள் வெகு சிறப்பாக குளச்சல் கடற்கரையில் நடைபெற்றது. கோட்டாறு மறைமாவட்ட ஆயர் மேதகு நசேரேன் சூசை தலைமை வகிக்க சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட தென்மண்டல கழக பொறுப்பாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., அவர்களுக்கு தமிழக மீனவ நலவாரிய தலைவர் A. ஜோசப் ஸ்டாலின் அவர்கள் நினைவு பரிசு வழங்கினார். உடன் அமைச்சர் மனோ தங்கராஜ் மற்றும் CPD இயக்குநர் அருட்பணி டங்சடன் ஆகியோர் உள்ளனர்.